பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
05 05 2025 **MONDAY** 7 15 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களும், மாணவர்களும் உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், ஆசிய வளர்ச்சி வங்கியின் வருடாந்திர கூட்டத்தில் இன்று பங்கேற்கவுள்ளார்.

3. இந்தியா – பெல்ஜியம் இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிக்க இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

4. டெல் அவிவ் விமான நிலையம் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஹைதராபாத் - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களும், மாணவர்களும், விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றமும் வளமும் ஏற்பட உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், குவாலியரில் உள்ள வேளாண் பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுடன் கலந்துரையாடிய அவர், விவசாயத்தை மேம்படுத்தவதன் மூலமே வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க முடியும் என்றார்.

விவசாயிகள், பயிர் சாகுபடி செய்வோராக மட்டுமின்றி வேளாண் சார்ந்த தொழில் முனைவோராக மாற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நவீன தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை பயன்படுத்தி மாணவர்கள் வேளாண்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், ஆசிய வளர்ச்சி வங்கியின் வருடாந்திர கூட்டத்தில் இன்று பங்கேற்கவுள்ளார்.

இதற்காக, இத்தாலியின் மிலன் நகருக்குச் சென்ற அவரை அங்குள்ள இந்திய தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

அமைச்சரின் பயணம் தொடர்பாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஆசிய வளர்ச்சி வங்கியின் கவர்னர்கள் குழுக் கூட்டத்தில் பங்கேற்கும் நிதியமைச்சர், எதிர்கால வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு குறித்த கருத்தரங்கிலும் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தினிடையே, இத்தாலி, ஜப்பான் மற்றும் பூட்டான் நாடுகளின் நிதியமைச்சர்களை சந்திக்கவுள்ள திருமதி. நிர்மலா சீதாராமன், ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் வேளாண் வளர்ச்சிக்கான சர்வதேச நிதியத்தின் தலைவர் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் கவர்னர் உள்ளிட்டோரையும் சந்திக்கவிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

மிலன் நகரில் வசிக்கும் இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடவுள்ள நிதியமைச்சர், பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி, தெலங்கானா மாநிலத்தில் இன்று சுமார் 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

ஆசிஃபாபாத் மாவட்டத்திற்கு உட்பட்ட **Kagaz** நகரில் நான்குவழிச் சாலையை நாட்டிற்கு அர்ப்பணிக்கும் அவர், ஹைதராபாதில் கட்டப்பட்டுள்ள இரண்டு மேம்பாலங்களையும் திறந்து வைக்கவுள்ளார்.

சம்சாபாத் பகுதியில் விரிவுபடுத்தப்பட்ட 6 வழிச்சாலையையும் தொடங்கி வைக்கும் திரு. நிதின் கட்கரி, பல்வேறு புதிய திட்டங்களுக்கும அடிக்கல் நாட்டுகிறார்.

**>>>>>><<<<<<**

சிக்கிம் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

காங்டாக்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் வடகிழக்கு மாநிலங்கள் அபார வளர்ச்சி பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

சிக்கிம் மாநிலம் உருவானதிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யாத மாநிலமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிக்கிம் மாநிலத்தில் உள்ள சுமார் 18 ஆயிரம் மாற்றுத்திறனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதுடன், மூத்த குடிமக்களுக்கு 7 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவி வழங்கப்படுவதாகவும் திரு. அத்வாலே தெரிவித்தார்.

முன்னதாக, சிக்கிம் ஆளுநர் திரு. ஓம் பிரகாஷ் மாத்தூரை, மத்திய இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

**>>>>>><<<<<<**

இந்தியா – பெல்ஜியம் இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிக்க இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், பெல்ஜியம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் வர்த்தக அமைச்சர் திரு. **Theo Francken–**னுடன் பிரசெல்ஸ் நகரில் நடத்திய

பேச்சுவார்த்தையின் போது, செமிகண்டக்டர், தூய்மையான எரிசக்தி, பாதுகாப்பு, மருந்துப்பொருட்கள் தயாரிப்பு உள்ளிட்ட துறைகளில் முதலீடுகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஐரோப்பிய யூனியனில் இந்தியாவின் ஐந்தாவது பெரிய பங்குதாரராக பெல்ஜியம் திகழ்வதாகவும், அந்நாட்டுடன் சுமார் 15 பில்லியன் டாலர் அளவிற்கு வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

மத்திய அமைச்சரும், பிஜேபி தலைவருமான திரு. ஜெ.பி. நட்டா, புதுதில்லியில் அங்கோலா அதிபர் திரு. **Joao Manuel Goncalves Lourenco–**வை சந்தித்து பேசியுள்ளார்.

‘பிஜேபி பற்றி அறிந்து கொள்ளுங்கள்’ என்ற முன்முயற்சியின் படி, நடைபெற்ற சந்திப்பின் போது, பிஜேபியின் அமைப்பு ரீதியிலான செயல்பாடுகள் குறித்து திரு. நட்டா, அங்கோலா அதிபருக்கு எடுத்துரைத்தார்.

நாட்டில் உள்ள பல்வேறு தரப்பினரையும் பிஜேபி தொடர்பு கொண்டு வருவது குறித்து அவர் விளக்கமளித்தார்.

பிஜேபி – அங்கோலாவின் மக்கள் இயக்கம் இடையே தூதுக்குழு அளவிலான பரிமாற்றத்தை மேற்கொண்டு பரஸ்பர நட்புறவை வலுப்படுத்துவது குறித்தும் திரு. நட்டா, அங்கோலா அதிபரிடம் யோசனை தெரிவித்தார்.

மேலும், மத்திய அரசு மேற்கொண்டு வரும் சுகாதார திட்டங்கள், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான திட்டங்கள் குறித்தும் திரு. நட்டா விவாதித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<<**

டெல் அவிவ் விமான நிலையம் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார.

ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய இந்த தாக்குதலில் 6 பேர் காயமடைந்தனர். பல்வேறு நாடுகளுக்கான விமான சேவையும் பாதிக்கப்பட்டது.

இதுகுறித்து திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹு விடுத்துள்ள காணொலிப் பதிவில், ஹவுதி அமைப்பினருக்கு எதிரான இஸ்ரேலின் நடவடிக்கை தொடரும் என்று கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மரங்கள் பாதுகாப்பு மற்றும் தண்ணீர் சேமிப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், மத்தியப்பிரதேசத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்கள் சைக்கிள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

நேற்றிரவு தமிழகத்தின் தூத்துக்குடி வந்த இவர்கள், உள்ளூர் மக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 31 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீது உச்சநீதிமன்றம் இன்று விசாரணை நடத்தவுள்ளது.

ஏற்கனவே சில சொத்துக்களை வக்ஃப் சொத்துக்களாக அறிவித்ததை நிறுத்தி வைக்குமாறு உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாட்டில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்பதே பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையாக உள்ளது என்று மத்திய அரசின் தலைமை அறிவியல் ஆலோசகர் திரு. அஜய்குமார் சூட் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியாவில் அண்மைக் காலத்தில் அறிவியல் தொழில்நுட்பத்திற்கு பெரும் ஊக்கமளிக்கப்படுவதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் துறையில் உருவாகும் சவால்களை எதிர்கொள்ளும் திறன் இந்தியாவிற்கு இருப்பதாக குறிப்பிட்ட திரு. அஜய்குமார் சூட், இந்த தொழில்நுட்பத்தின் பலனை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ர மாநில தீவிரவாத எதிர்ப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில், 15 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த நக்ஸலைட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மும்பை செசன்ஸ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை இம்மாதம் 13ஆம் தேதிவரை போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

புனே-யைச் சேர்ந்த **Prashant Jalindar Kamle** என்ற அந்த நபர், 2011ஆம் ஆண்டு பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு தேடப்பட்டு வந்தார்.

>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஹைதராபாத் - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 37 ரன் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

டாஸ் வென்ற லக்னோ அணி பந்துவீச தீர்மானித்ததை அடுத்து முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 236 ரன் எடுத்தது.

237 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய லக்னோ அணி 7 விக்கெட் இழப்புக்கு 199 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

>>>>>><<<<<<